2013 பிப்ரவரி 5]

3—

தொழில் மையம்

***3028—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியத்தில் தொழில் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

என்னை தமிழ்நாடு ஊரகத் தொழில் துறை அமைச்சராக நியமித்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே முதல் கேள்விக்கு பதில் அளிக்கின்ற ஒரு நல்வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டத்தைச் சேர்ந்த சேடப்பட்டி கிராமத்தில் சுமார் 50.91 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிட்கோ நிறுவனத்தின்மூலம் அனுமதி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியத்தில் 2012–2013ஆம் நிதியாண்டில் தொழில் மையம் அமைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டும், அதுசம்பந்தமாக நான் 3, 4 தடவை அந்த அலுவலகத்திற்கு நான் நேரடியாகச் சென்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திக்க முயன்றபோதும்கூட, அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை, சந்திக்க முடியவில்லை. அதனால், இந்த நிதியாண்டிலேயே இந்தத்*

தொழிற்பேட்டையை அமைக்க அரசு விரைவில் முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, இதற்கு முன்னால் அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தன என்பதனை நாங்களும் அறிவோம். ஆனால், இப்பொழுது சேடப்பட்டி கிராமத்தில் புல எண்கள் 27–ன்கீழ் 1A1, 1A2A மற்றும் சிலவற்றில் உள்ள 50.91 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டை அமைக்க நம்முடைய தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதையும், அதற்கான மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை, நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிற்பேட்டையை விரைவில் அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி பகுதி மிகவும் வறட்சியான பகுதி. அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பற்றிய செய்தியை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். தொழிற்பேட்டையை விரைவில் அமைக்கவேண்டுமென்று கேட்டு, தமிழக அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில் மட்டுமல்லாமல், தென்காசி நகரத்திலும்*

2013 பிப்ரவரி 5]

தொழிற்சாலைகள் அதிகமாக இல்லாத சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. தென்காசி ஒரு சுற்றுலா மையமாக அனைவராலும் கருதப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. கீழப்பாவூர், அடைக்கலம்பட்டி, ஆலங்குளம், மேலப்பாவூர், திப்பணம்பட்டி போன்ற இடங்களில் மல்லிகை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தென்காசியில் பெரிய மலர் அங்காடி உள்ளது. போதுமான விளைச்சலும் உள்ளது. எனவே, தென்காசியில் மல்லிகை வாசனைத் திரவிய உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பொதுவாக சிறு தொழில்களை ஆரம்பிக்கிறபோது அந்தப் பகுதியிலே இடம் தரப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலோடு கருத்துரு அனுப்பப்படுமேயானால், அந்தப் பகுதியினுடைய தேவைகளை உணர்ந்து அம்மா அவர்களுடைய அரசு அதனை நிறைவு செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுகாவுக்குட்பட்ட பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வாதாரம் முன்னேறும் வகையில், செஞ்சி அல்லது மேல்மலையனூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தொழில் மையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தொழில் மையங்களை உருவாக்குவது என்பது, அந்தந்தப் பகுதியினுடைய தேவையைப் பொறுத்தும், அதேநேரத்தில் அந்தத் தொழில் உருவாக்கும் திட்டத்துடன் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழில் முனைவோர்களும் அதற்கு மேலும் தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையோடு அந்தப் பகுதிகளில் தொழில் மையம் தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

4—

உதவித் தொகை

***7375**—**திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாற்றுத் திறனாளிகள் தங்களது உதவித் தொகையை எளிதாகவும், உடனடியாகவும் பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாற்றுத் திறனாளிகளின் பாதுகாவலராக விளங்குபவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தித் தந்தவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சிக் காலத்திலே பண அஞ்சல் மூலமாக, அதாவது money order *மூலமாக உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இம்முறையினால் ஏற்படுகின்ற காலதாமதத்தைத்*